மொழித்துறைகள் இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

இலக்கியங்கள் காட்டும் தேசிய ஒருமைப்பாடு

மார்ச் 24.2018

# NATIONAL INTEGRATION THROUGH LITERATURE
## (NS-NITL-18)



## Editors

**Prof.A.Vijayalakshmi**
**Dr.K.Latha**
**Prof.J.Benita Selvakumari**
**Prof.K.Kannan**

DARKNESS TO LIGHT

**DHANRAJ BAID JAIN COLLEGE (AUTONOMOUS)**
Owned and Managed by Team Trust A Jain Minority Institution
Approved by Govt. of Tamil Nadu Affiliated to University of Madras
Re-Accredited With 'A' Grade by NAAC
Jyothi Nagar, I.T.Corridor, Thoraipakkam, Chennai-600 097, Tamil Nadu, India
Phone: 7200071798/ 044-24960889

Website: www.dbjaincollege.org
Email: dbjainmca@yahoo.co.in

DHANRAJ BAID JAIN COLLEGE (AUTONOMOUS)
Owned and Managed by Team Trust
A Jain Minority Institution
Approved by Govt. of Tamil Nadu
Affiliated to University of Madras
Re-Accredited With 'A' Grade by NAAC
Jyothi Nagar, I.T.Corridor, Thoraipakkam, Chennai-600 097, Tamil Nadu, India.
Phone: 720071798
Website: www.dbjaincollege.org
Email: dbjainmca@yahoo.co.in

**National Seminar** on
NATIONAL INTEGRATION THROUGH LITERATURE (NS-NITL-18)

ISBN-978-81-910561-4-3
Copyright @ 2018 Dhanraj Baid Jain College (Autonomous)

All right reserved. No part of this book may be reproduced, stored in a retrieval system or copied in any form or by any means, electronic, mechanical, photographic or otherwise, without the prior written permission of the author and the publisher. The views expressed in the articles of this edited book are strictly those of the respective authors only and that the Dhanraj Baid jain College and editors have no responsibility towards such views what so ever.

Printed at:

Mass Typo Graphics,
Royapettah,
Chennai.

| | | |
|---|---|---|
| 40 | கவிக்கோ அப்துல் ரகுமான் படைப்புகளில் சமய ஒருமைப்பாடு – முனைவர் ம ரமேஷ் | 174 |
| 41 | தமிழ் இலக்கியங்களில் வாணிபம் - முனைவர். இரா.ரனிதா | 178 |
| 42 | சங்க இலக்கியம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் - க.விநாயகமூர்த்தி மற்றும் ச கணபதி | 181 |
| 43 | தமிழ் இலக்கியங்களில் யாழ் - முனைவர் பா.விஜய சாமுண்டீஸ்வரி | 184 |
| 44 | புறநானூறு காட்டும் ஒருமைப்பாடு - முனைவர் கா. லதா | 187 |
| 45 | தேசிய ஒருமைப்பாடு - பேரா.புவனேஸ்வரி கருணாகரன் | 190 |
| 46 | வள்ளுவத்தில் உலக ஒருமைப்பாடு - முனைவர். நா.ரேணுகா | 192 |
| 47 | இன்பத்திற்குவழிக்காட்டும்வள்ளுவர் - த.ஜெயபாரதி | 196 |
| 48 | பாரதியார் பாரதிதாசன் பாடல்களில் காணலாகும் ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் - பேரா.அ.விஜயலெட்சுமி | 199 |
| 49 | உணவே மருந்து - மருந்தே உணவு - பேரா.மு.ராமஜெயம் | 203 |
| 50 | கண்ணதாசன் காட்டும் சமயமும் அரசியலும் – பா.சரவணகுமார் | 206 |

 ISBN: 978-81-910561-4-3

## வள்ளுவத்தில் உலக ஒருமைப்பாடு

**முனைவர் நா. ரேணுகா**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி
மதுரை

ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னரே 'தேசியம்' என்ற வரையறை உருவானது. தேசிய ஒருமைப்பாடு என்ற சிந்தனை மேலோங்கியது. இதன் பாற்பட்ட சிந்தனைகள் இலக்கியங்களில் அழுத்தமாக முன் வைக்கப்பட்டன. அதற்கு முன்னர் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் உலகப் பொதுமையைப் போற்றின. பண்டைய தமிழரின் நோக்கு உயரிய நோக்குடையதாய் விளங்கியது. பழந்தமிழ் இலக்கியங்கள் பரந்த நோக்கத்துடனே படைக்கப்பட்டன. பொதுமையைப் போற்றும் பாங்குடன், தேசியம் கடந்த உலகளாவிய பார்வையில் இயங்கின. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமையை வேறெந்த மொழி இலக்கியத்திலும் காணஇயலாது. மண் பயனுற வேண்டுமென இலக்கியங்களைப் படைத்த சமூகம் தமிழ்ச்சமூகமாகும்.

செவ்வியல் இலக்கியங்களில் ஒப்பற்ற இலக்கியமாகத் திகழும் திருக்குறள் தேசிய நூலாகப் போற்றப்படும் பெற்றியது. உலக இலக்கியங்களோடு ஒப்ப வைத்துப் போற்றப்படும் நூலாகவும் திகழ்கிறது. இந்நூலுள் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வளம்சேர்க்கும் வண்ணம் இடம்பெற்றுள்ளன.

> **"மனித வளர்ச்சியின் பருவம் தோறும் துணைநின்று வழிநடத்தும் வாழ்வு நூல் உலகப் பொது நூல்"** (குன்றக்குடி அடிகளார்)

என்று போற்றப்படும் திருக்குறளில் மிளிரும் உலக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளைக் கண்டுணர்வது காலத்தின் தேவை.

> "திருக்குறள் பொழுதுபோக்கு இலக்கியமன்று; மனித சமுதாயத்தின் பொதுச் சட்டம்; இந்திய அரசியலைப்புச் சட்டம் என்கிறோமே அதுபோல, மனித சமுதாயத்தின் அரசியலைப்புச் சட்டம் திருக்குறள். மக்கள் சமுதாயம் எப்படி எப்படியெல்லாம் நாம் இருந்திடுவதற்கு அவர் விதிமுறைகளை வகுத்துத் தந்தார்."
>
> (ம.பொ.சிவஞானம்)